Returned U/S 173 BNSS
(BNSS பிரிவு 173ன் கீழ்

# FIRST INFORMATION REPORT

## முதல் தகவல் அறிக்கை

~~(Under Section 154 Cr.P.C.)~~
~~(கு.வி.மு.வி.பிரிவு 154 இன் கீழ்)~~

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8069064

1. District : மாவட்டம் நாகப்பட்டினம் PS: காவல்நிலையம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு நாகப்பட்டினம் Year: ஆண்டு 2025 FIR No.: மு.த.அ. எண் 01/2025 Date: நாள் 01.04.2025

2. (i) Act சட்டம்: PC Act, 1988 as Sections பிரிவுகள்: 7(a) The Prevention
   (ii) Act சட்டம்: amended by the PC Sections பிரிவுகள்: of Corruption Act, 1988
   (iii) Act சட்டம்: (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 27.3.2025 Date to : நாள் வரை 28.03.2025
   Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் 11.30 Hrs Time to : நேரம் வரை 12.30 Hrs
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 01.04.2025 Time : நேரம் 07.00 Hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 01.04.2025 Time : நேரம் 09.00 Hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்துமூலம் (கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் 2 கி.மீ. வடக்கு
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி மாவட்ட தொழில் மையம், நாகப்பட்டினம், நாகப்பட்டினம் மாவட்டம்
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் ப. சதீஷ்குமார் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் T.R. கோவிந்தராஜ்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 25/[illegible] (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் வியாபாரம் Two Wheeler Spare Parts Shop (g) Address : முகவரி No.7, மெயின் ரோடு, மஞ்சக்கொல்லை, திட்டச்சேரி, நாகப்பட்டினம் தாலுகா

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திரு அன்பழகன், உதவி இயக்குநர், மாவட்ட தொழில் மையம், நாகப்பட்டினம், நாகப்பட்டினம் மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   — தாமதமில்லை காரணம் —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

— இல்லை —

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு — இல்லை —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. இன்று 01.04.2025 ஆம் தேதி காலை 07.00 மணிக்கு நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் G.ரமேஷ் குமார் ஆகிய நான் அலுவலகத்திலிருந்த போது திரு.G.சதீஷ்குமார், த/பெ.கோவிந்தராஜ், No.7, மெயின்ரோடு, மரைக்கான்சாவடி, திட்டச்சேரி, நாகப்பட்டினம் தாலுக்கா, நாகப்பட்டினம் மாவட்டம் என்பவர் என்முன் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகார் பின்வருமாறு:- 01.04.2025 அனுப்புதல் G.சதிஷ்குமார், த/பெ.கோவிந்தராஜ், No.7, மெயின்ரோடு, மரைக்கான்சாவடி, திட்டச்சேரி, நாகப்பட்டினம் தாலுக்கா, பெறுதல் உயர்திரு காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, காடம்பாடி, நாகப்பட்டினம், அய்யா, நான் நாகப்பட்டினம் தாலுக்கா திட்டச்சேரிமரைக்கான்சாவடி என்ற முகவரியில் என்குடும்பத்தாருடன் வசித்து வருகின்றேன். நான் DME படித்துள்ளேன். நடுக்கடையில் ஸ்ரீ மாடன் ஆட்டோ ஸ்பேர்ஸ் என்ற பெயரில் Two wheeler spare parts கடை வைத்துள்ளேன். நான் கடந்த 2024 ஆம் ஆண்டு நாகப்பட்டினம் மாவட்ட தொழில் மையத்தில் வேலையில்லா இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்கீழ் மானியத்துடன்கூடிய கடன் உதவி தொகை ரூபாய் 5,00,000/- கேட்டு Online-ல் விண்ணப்பம் செய்தேன். அதனடிப்படையில் கடந்த 28.02.2025 ஆம் தேதி நாகப்பட்டினம் மாவட்ட தொழில் மையத்தின் பரிந்துரையின் பேரில் திட்டச்சேரி IOB பேங்கில் எனக்கு ரூபாய் 5,00,000/-த்திற்கான காசோலை கொடுத்தார்கள். கடந்த 24.03.2025 ஆம் தேதி

(தொடர்ச்சி இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

பணிந்து சமர்ப்பிக்கப்பட்டது [signature]

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
01.04.2025

15. Date & Time of despatch to the court: 01.4.2025
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் G. RAMESH KUMAR
Rank: நிலை Inspector of PC ..........No. எண் ..........
Vigilance & Anti-corruption
Nagapattinam

**நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.01/2025 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி** :-

நாகப்பட்டினம் மாவட்ட தொழில் மையத்தின் உதவி இயக்குநர் அவர்களிடம் மானியம் தொடர்பாக என்னுடைய செல்போனிலிருந்து பேசியபோது அவரை நேரில் வந்து பார்க்கச்சொன்னார். அதன்பேரில் நான் 27.03.2025 ஆம் தேதி காலை சுமார் 11.30 மணியளவில் நாகப்பட்டினம் மாவட்ட தொழில் மையத்திற்கு சென்று உதவி இயக்குநர் திரு.அன்பழகன் அவர்களை பார்த்து, என்னுடைய மானியம் தொடர்பாக கேட்டேன். அதற்கு உதவி இயக்குநர் திரு.அன்பழகன் அவர்கள் எனக்குண்டான 25% மானியத்தொகை ரூபாய் 1,25,000/-த்தை பரிந்துரை செய்து திட்டச்சேரி IOB பேங்கிற்கு அனுப்பவேண்டுமானால் தனக்கு ரூபாய் 12,000/- கொடுத்தால் அனுப்பிவிடுகிறேன் என்று சொன்னார். அதன்பின்னர் 28.03.2025 ஆம் தேதி மதியம் 12.30 மணியளவில் நாகப்பட்டினம் மாவட்ட தொழில் மையத்திற்கு சென்று உதவி இயக்குநர் திரு.அன்பழகன் அவர்களை பார்த்து, என்னுடைய மானியம் தொடர்பாக கேட்டேன். அதற்கு உதவி இயக்குநர் திரு.அன்பழகன் அவர்கள் என்னிடம் என்ன நான் கேட்ட ரூபாய் 12,000/-த்தை எடுத்து வந்திருக்கிறாயா என்று கேட்டார். அப்போது நான் அவரிடம், தற்போது என்னிடம் பணம் இல்லை மானிய பணத்தை பரிந்துரை செய்து அனுப்புங்கள் நான் பின்னர் பணம் தருகிறேன் என்று சொன்னேன். அதற்கு உதவி இயக்குநர் திரு.அன்பழகன் அவர்கள் 12,000/- ரூபாய் கொடுத்தால்தான், நான் General Manager-க்கு பரிந்துரை செய்து அவரிடம் கையெழுத்து வாங்கி திட்டச்சேரி IOB பேங்கிற்கு அனுப்புவேன் என்று சொன்னார். நான் வேறுவழியில்லாமல் சரி பணத்தை ரெடிப்பண்ணிக்கொண்டு 01.04.2025 ஆம் தேதி செவ்வாய் கிழமை வருகிறேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். நாகப்பட்டினம் மாவட்ட தொழில் மையத்தின் உதவி இயக்குநர் திரு.அன்பழகன் அவர்கள் என்னிடம் எனக்குண்டான 25% மானியத்தொகை ரூபாய் 1,25,000/-த்தை பரிந்துரை செய்து திட்டச்சேரி IOB பேங்கிற்கு அனுப்புவதற்கு அவருக்கு லஞ்சமாக கேட்ட ரூபாய் 12,000/-த்தை உதவி இயக்குநருக்கு கொடுக்க எனக்கு விருப்பமில்லை. அதனால் என்னிடம் லஞ்சம் கேட்ட உதவி இயக்குநர் திரு.அன்பழகன் என்பவரின்மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்க நாகப்பட்டினம் லஞ்ச ஒழிப்புதுறையில் புகார் கொடுக்கலாம் என்று முடிவு செய்து, ரூபாய் 12,000/-த்தை ஏற்பாடு செய்துகொண்டு இன்று 01.04.2025 ஆம் தேதி இந்தப் புகாரை கொடுக்கிறேன். எனக்குண்டான 25% மானியத்தொகை ரூபாய் 1,25,000/- த்தை பரிந்துரை செய்து திட்டச்சேரி IOB பேங்கிற்கு அனுப்புவதற்கு ரூபாய் 12,000/- லஞ்சம் கேட்ட நாகப்பட்டினம் மாவட்ட தொழில் மையத்தின் உதவி இயக்குநர் திரு.அன்பழகன் என்பவரின்மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு (ஆங்கிலத்தில் ஒப்பம்) G.சதீஷ் குமார் 01/04/25 **SUBMITTED** Hon'ble Sir, Received this computer typed written complaint from the complainant on 01.04.2025 at 07.00 hours, and verified the antecedents of the Accused Officer and ascertained its genuineness of the complaint through sources, after that registered a case on the complaint on 01.04.2025 at 09.00 hours

in Nagapattinam Vigilance and Anti-Corruption Detachment **Crime No.01/2025**, U/s. 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption(Amendment) Act 2018.

01.4.2025

**(G.RAMESH KUMAR)**
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Nagapattinam.

I am submitting the Original F.I.R, along with the complaint to the Hon'ble Court of the Chief Judicial Magistrate/Special Judge, Nagapattinam and the copies of the F.I.R. to all other concerned Officials.

01.4.2025

**(G.RAMESH KUMAR)**
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Nagapattinam.